**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.**

**முன்னிலை : திருமதி.ஜா.ஆஃப்ரீன் பேகம், M.Com., L.L.M.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நத்தம்.

2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 12ம் நாள் வியாழக்கிழமை

திருவள்ளுவராண்டு 2057 ஸ்ரீவிசுவாவசு வருடம், மாசி திங்கள் 28ம் நாள்

ஆண்டுபட்டிகை வழக்கு எண்.54/2025

CNR No.TNDG100005852025

குற்றமுறையிடுபவர் – காவல் சார்பு ஆய்வாளர்
நத்தம் காவல் நிலைய
குற்ற எண்: 499/2024

எதிரியின் பெயர் – அசோக் 30/2024 த/பெ.வில்லி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற 07.04.2021 நாளிட்ட R.O.C No.814/2020/RG/FI(P.Dis.No.36/2021) உத்தரவின்படி CASE SUMMARY கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது. | | | | | |
| CASE SUMMARY | | | | | |
| (i) | The period of remand of the accused | : | Name of the Accused | Date of Arrest/Remand | Release on |
| | | | அசோக் 30/2024 த/பெ.வில்லி (லேட்), தேத்தாம்பாடி, நத்தம் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம். | 12.09.2024 | 26.09.2024 |
| (ii) | Date of filing of thecomplaint/final report in the court | : | Filing of Complaint | Filing of Final Report | |
| | | | 09.09.2024 | 04.02.2025 | |
| (iii) | Date of committal of the cases to the Court of Sessions: | : | Nil | | |

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.03.12 06:41:45 +0530

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (iv) | Date of questioning of the accused under Section 228, 240 and 251 of the Code of Criminal Procedure 1973, as the case may be; | : | 23.07.2025ம் தேதி அன்று நத்தம் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்ட எதிரி மீது பிரிவு 4(1)(C) TNP (Amendment) Actன் கீழ் குற்றம் குறித்து விளக்கி கூறப்பட்டது. | | | |
| (v) | Filing of all miscellaneous petitions and their results | : | Crl.M.P.No. | Date of Filing | Result | |
| | | | Nil | | | |
| (vi) | Date of Examination in Chief and Cross | : | Name of the Examination | | Date of Chief | Date of Cross |
| | | | PW1 | திரு.கிருபாகரன் | 16.09.2025 | 22.01.2026 |
| | | | PW2 | திரு.ராபர்ட் லாரன்ஸ் | 16.09.2025 | 22.01.2026 |
| | | | PW3 | திரு.அழகுராஜ் | 16.09.2025 | 22.01.2026 |
| | | | PW4 | திரு.ஜெரால்டுராஜா | 25.02.2026 | 25.02.2026 |
| | | | PW5 | திருமதி.ஜோதிலெட்சுமி | 25.02.2026 | 25.02.2026 |
| | | | PW6 | திரு.கிருஷ்ணகுமார் | 26.02.2026 | 26.02.2026 |
| (vii) | Date of examination of the accused under section 313 of the Code; | : | 27.02.2026 | | | |
| (viii) | Details of abscondance of an accused and his appearance /production, as the case may be; and | : | Nil | | | |
| (ix) | Grant of stay by superior courts and the results thereof | : | Sessions Court CMP Numbers | High Court No and Date of Stay | Result | |
| | | | Nil | | | |
| குற்றஞ்சாட்டு: | | | கடந்த 09.09.2024ம் தேதி 15.45 மணிக்கு எதிரி பரளிபுதூர் கிராமம் தேத்தாம்பட்டியில் உள்ள வீட்டின் அருகில் உள்ள செடி புதரில் அரசு அனுமதியின்றி 180 ML அளவுகொண்ட Blue Grape Brandy –10 பாட்டில்கள், 180 ML அளவு கொண்ட | | | |

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.03.12 06:41:56 +0530

| | | |
|---|---|---|
| | | Crown of Crowns Brandy –21 பாட்டில்கள் மற்றும் லேபிள் இல்லாத, மூடி திறக்கப்பட்டு சீல் இல்லாமல் இருந்த 2 பாட்டில்கள் ஆகியவற்றை சுயலாபம் கருதி விற்பனைக்கு வைத்திருந்ததாக எதிரி மீது பிரிவு 4(1)(C)TNP (Amendment) Actன் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ளார். |
| எதிரிகளின் பதில் | : | குற்றவாளி இல்லை |
| நீதிபதியின் தீர்மானம் | : | இறுதியாக, எதிரி மீதான பிரிவு 4(1)(C) TNP (Amendment) Actன் கீழ் சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டு தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று தீர்மானித்து, எதிரியை மேற்படி பிரிவின் கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து எதிரியை பிரிவு 271(1) of BNSS Actன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. எதிரி இவ்வழக்கில் கொடுத்துள்ள பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்தாக உத்தரவிடப்படுகிறது. |
| தண்டனை (அ) உத்தரவு | : | எதிரி நிறைவேற்றி தந்த பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்கு பின்பு ரத்தாக உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படாததால் சொத்துக்கள் குறித்த உத்தரவு இல்லை. |

இவ்வழக்கு 21.04.2025ம் தேதி கோப்புக்கு எடுக்கப்பட்டு இறுதியாக 05.03.2026 அன்று விசாரணைக்கு வந்த போது அரசுத் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை–I திருமதி. P. அமர்ஜோதி அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் திரு.K.பரமசிவம் வழக்கறிஞரும் ஆஜராகி இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளை கேட்டு வழக்காவணங்களை பரிசீலனை செய்து இதுநாள்வரை இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## தீர்ப்புரை

இவ்வழக்கானது எதிரி மீது பிரிவு 4(1)(a) TNP Actன் கீழ் நத்தம் காவல் நிலைய காவல் சார்பு ஆய்வாளர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்டு கோப்பிற்கு எடுக்கப்பட்டது. இதற்கு பின்பு தமிழ்நாடு மதுவிலக்கு தடை சட்டம் (திருத்தப்பட்டது) ஆனது சுருக்கமாக TNP (Amendment) என்றும், பாரதிய

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Date: 2026.03.12 06:42:01 +0530

குடிமக்கள் பாதுகாப்பு சட்டம் 2023 (The Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023) ஆனது சுருக்கமாக BNSS என்றும், பாரதிய நியாய சட்டம் 2023 (The Bharatiya Nyaya Sanhita, 2023) ஆனது சுருக்கமாக BNS என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

2) **<u>குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம் –</u>**

கடந்த 09.09.2024ம் தேதி 15.45 மணிக்கு எதிரி பரளிபுதூர் கிராமம் தேத்தாம்பட்டியில் உள்ள வீட்டின் அருகில் உள்ள செடி புதரில் அரசு அனுமதியின்றி 180 ML அளவுகொண்ட Blue Grape Brandy –10 பாட்டில்கள், 180 ML அளவு கொண்ட Crown of Crowns Brandy –21 பாட்டில்கள் மற்றும் லேபிள் இல்லாத, மூடி திறக்கப்பட்டு சீல் இல்லாமல் இருந்த 2 பாட்டில்கள் ஆகியவற்றை சுயலாபம் கருதி விற்பனைக்கு வைத்திருந்ததாக நத்தம் காவல் நிலைய சார்பு ஆய்வாளரால் 09.09.2024ம் தேதி பிரிவு 4(1)(a) TNP Actன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் ஆண்டு பட்டிகை வழக்கு எண் – 54/2025 என கோப்புக்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. எதிரி முன்னிலையானவுடன், அரசு தரப்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் BNSS, 2023 பிரிவு 230–ன் கீழ் 14.05.2025ம் தேதி அன்று இலவசமாக வழங்கப்பட்டது.

4) குற்றப்பத்திரிக்கையில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளைப் பொறுத்து, இரு தரப்புக்கும் போதிய கால அவகாசம் வழங்கப்பட்டு, இரு தரப்பையும் கேட்டும், எதிரி மீது புலன்விசாரணை அதிகாரியால் பிரிவு 4(1)(a) TNP Actன்கீழ் குற்றம் சாட்டப்பட்டு இருப்பினும், குற்ற நிகழ்வு நாள் 02.10.2024 என்பதாலும், 12.07.2024ம் தேதி TNP Act ஆனது சட்டத்திருத்தம் செய்யப்பட்டு

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.03.12 06:42:13 +0530

உள்ளதாலும், மேற்படி எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் குறித்தும் ஆவணங்களைப் பரிசீலனை செய்த வகையில் எதிரி மீது பிரிவு 4(1)(C) TNP (Amendment) Actன் கீழ் 23.07.2025ம் தேதியன்று BNSS, 2023 பிரிவு 263ன் கீழ் தமிழில் விளக்கி கூறி வினவிய போது எதிரி குற்றச்சாட்டுகளை மறுத்து குற்றவாளி இல்லை என கூறினார். எனவே, அரசு தரப்பு சாட்சிய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

5) அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.6 ஆகியோர்கள் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டனர். அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.12 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**6) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரிய வரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு –**

7) கடந்த 09.09.2024ம் தேதி 15.45 மணிக்கு எதிரி பரளிபுதூர் கிராமம் தேத்தாம்பட்டியில் உள்ள வீட்டின் அருகில் உள்ள செடி புதரில் அரசு அனுமதியின்றி 180 ML அளவுகொண்ட Blue Grape Brandy –10 பாட்டில்கள், 180 ML அளவு கொண்ட Crown of Crowns Brandy –21 பாட்டில்கள் மற்றும் லேபிள் இல்லாத, மூடி திறக்கப்பட்டு சீல் இல்லாமல் இருந்த 2 பாட்டில்கள் ஆகியவற்றை சுயலாபம் கருதி விற்பனைக்கு வைத்திருந்ததாக அ.சா.6 கிருஷ்ணகுமார் என்பவரிடம் அ.சா.1 தனி அறிக்கையை கொடுத்துள்ளார்.

8) சம்பவ இடமான பரளி தேத்தாம்பட்டியில் அசோக் என்பவரின் வீட்டின் எதிரே உள்ள செடியின் புதரில் பிளாஸ்டிக் சாக்குமூட்டையில் மறைத்து வைக்கப்பட்டிருந்ததை எடுத்து பிளாஸ்டிக் சாக்கை பிரித்து பார்த்தபோது அதில் பாண்டிச்சேரி மது வகைகளான 180 ML அளவு கொண்ட புளூ கிரேப் பிராந்தி 10 பாட்டில்கள், 180 ML அளவு கொண்ட Crown of Crowns பிராந்தி

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.03.12 06:42:22 +0530

21 பாட்டில்கள் மற்றும் லேபிள்கள் கிழிக்கப்பட்டும், மூடி திறக்கப்பட்டு மூடிய நிலையில் சீல் இல்லாமல் இருந்த 180 ML அளவு கொண்ட மது பாட்டில்கள் இரண்டும் இருந்ததாகவும், மூடி திறந்த நிலையிலும் விற்பனைக்கு வைத்திருந்த 2 பாட்டில்களை பகுப்பாய்வுக்கு அனுப்புவதற்காக வெள்ளைநாடாவால் சுற்றப்பட்டு போலீஸ் பட்டன் சீல் வைத்தும் மேலும், பாண்டிச்சேரி மதுபாட்டில்களை வாங்கி வந்து தமிழ்நாட்டில் விற்பனை செய்ய மறைத்து வைத்திருந்த மதுபாட்டில்களான வழக்கு சொத்துக்களை 16.00 மணிக்கு அந்த இடத்தில் வைத்து அ.த.சா.ஆ.6 அத்தாட்சியில் கைப்பற்றி**யதாகவும்,** கைப்பற்றப்பட்ட சொத்துக்களுடன் 17.30 மணிக்கு நிலையம் வந்து மதுபாட்டில்களை விற்பனைக்கு அவரது வீட்டின் முன்பு செடி புதரில் மறைத்து வைத்திருந்த அசோக் என்பவர் மீது நத்தம் காவல் நிலைய குற்ற எண்.499/2024 பிரிவு 4(1-A) TNP Act ஆக வழக்கு பதிவு அ.த.சா.ஆ.7 முதல்தகவல்அறிக்கை பதிவு செய்ததாகவும், எதிரியை கைது செய்ய வேண்டி தேடி வந்த நிலையில் 12.09.2024ம் தேதி காலை 8.00 மணிக்கு கைது செய்து அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் தலைமைக் காவலர் அழகுராஜ் மற்றும் முதல் நிலைக் காவலர் ஜெரால்டு ராஜா ஆகியோர் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் (அ.த.சா.ஆ.8 ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி) தயார் செய்யப்பட்டதாகவும், நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் அ.த.சா.ஆ.9 படிவம் 91 மூலம் அ.சா.பொ.1 வழக்கு சொத்துக்களை ஒப்படைத்ததாகவும், மேற்படி மதுபாட்டில்களின் புகைப்படங்கள் மற்றும் அ.த.சா.ஆ.10 பிரிவு 65-B IEA சான்றிதழுடன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், பின்னர் வெள்ளைநாடாவால் சுற்றப்பட்டு போலீஸ் பட்டன் சீல் வைக்கப்பட்ட 2 மதுபாட்டில்களை பகுப்பாய்விற்காக மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், ஆய்வறிக்கையில் They are coloured flavoured alcohol and free from

methyl alcohol and Atropine என சான்று அறிக்கை வழங்கப்பட்டதாகவும், இவ்வழக்கின் சட்டப் பிரிவை 4(1–A) TNP Act என்பதிலிருந்து 4(1)(a) TNP Actஆக மாறுதல் செய்து அ.த.சா.ஆ.12 சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து இவ்வழக்கின் புலன்விசாரணையை முடித்து எதிரி மீது 04.02.2025ம் தேதி சட்ட பிரிவு 4(1)(a) TNP Actன் கீழ் குற்றயிறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

9) பதிவு செய்யப்பட்ட அரசு தரப்பு சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமான சங்கதிகளை குறித்து பிரிவு 351(1)(b) of BNSS, 2023–ன் கீழ் எதிரியிடம் எடுத்துக்கூறி விளக்கி வினவியபோது அரசுத்தரப்பு சாட்சியம் பொய் என்றும், தன் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினார்.

10) அரசு தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் இந்த வழக்கில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், வழக்கு சொத்து எதிரியிடமிருந்து தான் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும், வழக்கு சொத்தை சில்லறை விற்பனை செய்யவே எதிரி அவரது உடைமையில் வைத்திருந்தார் என்றும், எனவே எதிரிக்கு உரிய தண்டனை வழங்கவேண்டும் என்றும் வாதிட்டார்.

11) எதிரி தரப்பில், எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும், வழக்கு சொத்திற்கும் எதிரிக்கும் சம்பந்தமில்லை என்றும், இவ்வழக்கு எதிரி மீது புள்ளியல் கணக்கிற்காக போடப்பட்டுள்ளது என்றும், இவ்வழக்கில் தொடர்புடைய அனைத்து ஆவணங்களும் காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றும், மேலும், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி வழக்கை சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.03.12 06:42:27 +0530

குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே, எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டுமென்றும் வாதிடப்பட்டுள்ளது.

**தீர்மானிக்கப்பட வேண்டிய பொருண்மை:**

12) இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்,

1) அரசு தரப்பில் எதிரி மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசுத் தரப்பால் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதும்,

2) அவ்வாறு நிரூபணம் செய்யப்பட்டால் எதிரிக்கு கிடைக்கக்கூடிய தண்டனை குறித்த விபரம் என்ன? என்பதேயாகும்.

13) **தீர்வு**

13.1) கடந்த 09.09.2024ம் தேதி 15.45 மணிக்கு எதிரி பரளிபுதூர் கிராமம் தேத்தாம்பட்டியில் உள்ள வீட்டின் அருகில் உள்ள செடி புதரில் அரசு அனுமதியின்றி 180 ML அளவுகொண்ட Blue Grape Brandy –10 பாட்டில்கள், 180 ML அளவு கொண்ட Crown of Crowns Brandy –21 பாட்டில்கள் மற்றும் லேபிள் இல்லாத, மூடி திறக்கப்பட்டு சீல் இல்லாமல் இருந்த 2 பாட்டில்கள் ஆகியவற்றை சுயலாபம் கருதி விற்பனைக்கு வைத்திருந்தார் என்பதையும் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கும் பொறுப்பு அரசு தரப்பிடமே உள்ளது. இவ்வழக்கில் எதிரியின் வசம் தான் வழக்கு சொத்துக்கள் இருந்தது என்பதையும், அதை சில்லறை விற்பனை செய்தார் என்பதையும் நிரூபணம் செய்யும் பட்சத்தில் தான் எதிரிக்கு அவர் தரப்பை நிரூபணம் செய்யவேண்டிய பொறுப்பு ஏற்படும்.

13.2) எதிரி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் வாதங்களின் போது வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்ட விதம் குறித்து

ஆட்சேபணை தெரிவித்து, சம்பவயிடத்தில் இருந்து வழக்கு சொத்துக்கள் எதிரியிடமிருந்து கைப்பற்றப்படவில்லை என்றும், எதிரிக்கும் வழக்கு சொத்துக்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும், வழக்கு சொத்துக்களுக்கும் எதிரிக்கும் இடையே உள்ள தொடர்புமை சட்டப்படியாக நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், இது அரசு தரப்பு வழக்கை முற்றிலும் பாதிப்பதாக உள்ளது என்றும் வாதங்கள் முன்னிட்டார். இது குறித்து பரிசீலனை செய்ததில் அ.சா.1 தனது முதல் விசாரணையில் "கடந்த 09.09.2024ம் தேதி நானும், முதல் நிலைக் காவலர் 131 திரு.ராபர்ட் லாரன்ஸ் என்பவரும் சார்பு ஆய்வாளர் திரு.கிருஷ்ணகுமார் என்பவருடன் 15.00 மணிக்கு ரகசிய தகவலின் அடிப்படையில் பரளி கிராம பகுதிகளில் ரோந்து செய்தோம். ரகசிய தகவலாளி எங்கள் மூவரையும் அழைத்துக் கொண்டு அரசு அனுமதியின்றி மது விற்பனை செய்வதாக தேத்தாம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த வில்லி மகன் அசோக் என்பவரின் இடத்தை எங்களுக்கு காட்டிவிட்டு தகவலாளி சென்றுவிட்டார். அதன்பேரில் 15.45 மணிக்கு அவ்விடத்தில் இருந்த புதர் செடியில் பிளாஸ்டிக் சாக்குமூட்டை இருந்தது. அதை நாங்கள் திறந்து பார்த்தபோது பாண்டிச்சேரியைச் சேர்ந்த மது வகைகளான 180 ML அளவுள்ள Blue Grape Brandy 10 பாட்டில்களும், 180 ML அளவுள்ள Crown of Crowns Brandy 21 பாட்டில்களும், மேலும் லேபிள்கள் கிழிக்கப்பட்டு சீல் உடைக்கப்பட்டு 180 ML அளவுள்ள மது பாட்டில்கள் 2ம் இருந்தன" என்றும் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்டது குறித்தும், பகுப்பாய்விற்கு எடுக்கப்பட்டது குறித்தும், எதிரி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சாட்சியின் சாட்சியத்தை தழுவியே அ.சா.2 சாட்சியம் அளித்துள்ளார்.

13.3) புலன் விசாரணை அதிகாரியான அ.சா.6 தனது சாட்சியத்தில் "கடந்த 09.09.2024ம் தேதி 15.00 மணிக்கு நான் நத்தம் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக நிலையப் பொறுப்பில் இருந்தபோது ரகசிய தகவலாளி

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Date: 2026.03.12 06:42:42 +0530

நிலையத்தில் நேரில் ஆஜராகி கூறிய தகவலை 15.05 மணிக்கு தனியறிக்கையாக பதிவு செய்தேன். பின்பு அதை பொதுநாட் குறிப்பில் பதிவு செய்தேன். எனக்கு கிடைத்த தகவலை எனது மேலதிகாரியான காவல் ஆய்வாளர் அவர்கள் வெளி அலுவலில் இருந்த காரணத்தினால் அவர்களுக்கு போன் மூலம் தகவல் தெரிவித்து அனுமதி பெற்று என்னுடன் நிலைய அலுவலில் இருந்த தலைமைக் காவலர் திரு.கிருபாகரன் (1307) மற்றும் முதல் நிலைக் காவலர் திரு.ராபர்ட் லாரன்ஸ் ஆகியோர்களுடன் புறப்பட்டு போதைப் பொருள் குற்றத் தடுப்பு சம்பந்தமாக ரோந்து செய்து 15.45 மணிக்கு பரளி, தேத்தாம்பட்டி அருகே சென்றபோது எனது ரகசிய தகவலாளி மதுபாட்டில்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ள இடத்தை அடையாளம் காட்டிவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டார். அவர் அடையாளம் காட்டிய இடமான பரளி தேத்தாம்பட்டியில் அசோக், த/பெ.வில்லி என்பவரின் வீட்டின் எதிரே உள்ள செடியின் புதரில் பிளாஸ்டிக் சாக்குமூட்டையில் மறைத்து வைக்கப்பட்டிருந்ததை எடுத்து பிளாஸ்டிக் சாக்கை பிரித்து பார்த்தபோது அதில் பாண்டிச்சேரி மது வகைகளான 180 ML அளவு கொண்ட புளு கிரேப் பிராந்தி 10 பாட்டில்கள், 180 ML அளவு கொண்ட Crown of Crowns பிராந்தி 21 பாட்டில்கள் மற்றும் லேபிள்கள் கிழிக்கப்பட்டும், மூடி திறக்கப்பட்டு மூடிய நிலையில் சீல் இல்லாமல் இருந்த 180 ML அளவு கொண்ட மது பாட்டில்கள் இரண்டும் இருந்தன" என தெரிவித்துள்ளார்.

13.4) அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா.6 ஆகியோரின் சாட்சியங்களை பரிசீலனை செய்ததில் "கைப்பற்றப்பட்ட மது பாட்டில் சம்பந்தமாக அக்கம் பக்கத்தில் விசாரித்தபோது தெரியாது என்று கூறிவிட்டார்கள் என்றும், அந்த மது பாட்டில்கள் இருந்த இடத்திற்கு அருகில் இருந்த அசோக் என்பவரின் வீட்டில் யாரும் இல்லை என்றும், பின்னர் லேபிள்கள் கிழிக்கப்பட்டு மூடி திறந்த

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.03.12 06:42:50 +0530

நிலையில் வைக்கப்பட்டிருந்த 2 பாட்டில்களை நுகர்ந்து பார்த்தபோது, கொடிய நெடியுடைய வாசனை வந்ததால் அவற்றை பகுப்பாய்விற்கு அனுப்புவதற்காக வெள்ளை நாடாவால் சுற்றி போலீஸ் பட்டன் சீல் வைத்து மற்ற கைப்பற்றப்பட்ட மது பாட்டில்களுடன் சேர்த்து மேற்கண்ட சொத்துக்களை சார்பு ஆய்வாளர் அவர்கள் தனி நபர் சாட்சி யாரும் முன்வராததால் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் முன்னிலையிலும் அத்தாட்சியில் கைப்பற்றினார் என்றும், பின்னர் கைப்பற்றப்பட்ட சொத்துக்களுடன் நிலையம் வந்து மதுபாட்டில்களை விற்பனைக்கு அவரது வீட்டின் முன்பு செடி புதரில் மறைத்து வைத்திருந்த அசோக் என்பவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வழக்கு சொத்துக்கள் ஆனது எதிரியின் வீட்டின் முன்புறம் இருந்த செடி புதரில் மறைக்க வைக்கப்பட்டிருந்தது என்பதன் அடிப்படையில் எதிரி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. எதிரி தான் செடி புதரில் வழக்கு சொத்துக்களை மறைத்து வைத்திருந்தார் என்பதற்கு உரிய தனி நபர் சாட்சி இல்லாத நிலையிலும், எவ்வித முதற்கட்ட விசாரணையும் இன்றி எதிரி மீது நேரடியாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை காண முடிகிறது. இது அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாகவே உள்ளது.

13.5) மேலும் எதிரி தரப்பில் ஒப்புதல் வாக்குமூலம் ஆனது எதிரியின் வீட்டில் முன்புறம் வைத்து பெறப்பட்டுள்ளது என்றும், ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எவ்வித சான்று பொருட்களும் கைப்பற்ற படாத நிலையில் மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் சட்டப்படி ஏற்றுக்கொள்ளக் கூடியது இல்லை என்றும், ஒப்புதல் வாக்குமூலம் ஆனது தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றும், கையால் எழுதப்படாமல் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது சந்தேகத்தை ஏற்படுத்துவதாக உள்ளது என்றும், ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி தெரிவித்ததாக சொல்லப்படும் விபரங்கள் குறித்து

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.03.12 06:42:55 +0530

கேட்டபோது தெரியாது என்றும், தவறாக முன்னுக்குப் பின் முரணான விபரங்கள் தெரிவித்தும் உள்ளார்கள் என்றும் எனவே மேற்படி சாட்சிகள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் எதிரியிடமிருந்து பெறப்படவில்லை என்றும், ஏற்கனவே தயார் செய்து வைத்திருந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சிகளின் கையொப்பம் பெறப்பட்டுள்ளது என்றும் வாதங்களை முன்னிட்டார்.

13.6) மேற்படி வாதங்கள் குறித்து பரிசீலனை செய்ததில் ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் தங்களது சாட்சியங்களில் "எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் எந்த தேதியில், எந்த நேரத்தில், எந்த இடத்தில் வைத்து பெறப்பட்டது என்றால் 12.09.2024ஆம் தேதி காலை 8.30 மணி அளவில் தேத்தாம்பட்டி பரளியில் வைத்து பதிவு செய்யப்பட்டது. எந்த வழக்கு தொடர்பாக வாக்குமூலம் பெறப்பட்டது என்றால் 09.09.2024–ஆம் தேதி பதிவு செய்யப்பட்ட தமிழ்நாடு மதுவிலக்கு தடை சட்டம் கீழான வழக்கிற்கு ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது... ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அந்த தேதியில் வழக்குப் பொருட்கள் கைப்பற்றப்பட்டதா என்றால் இல்லை... எதற்காக ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கிறார் என்றும் என்னென்ன பொருட்கள் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டது என்பது குறித்தும் எதிரி சொன்னாரா என்றால் அது பற்றி ஞாபகம் இல்லை" என்று தெரிவித்துள்ளார்.

13.7) ஒப்புதல் வாக்குமூலம் வாயிலாக எவ்வித சான்று பொருட்களும் கைப்பற்றப்படவில்லை என்பதும், மேற்படி ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளின் சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் இல்லை என்பதும் அறிய முடிகிறது. காரைக்கால் அருகே 150 மதுபான பாட்டிகள் எதிரி வாங்கியதாகவும், அங்கிருந்து ஊருக்கு கொண்டு வந்ததாகவும் தெரிவித்துள்ள நிலையில், பாண்டிச்சேரியில் அல்லது தமிழ்நாட்டிலும் உள்ள சோதனை சாவடிகளை கடந்துதான் அதை கொண்டு வந்திருக்க முடியும் என்பதை புலன்

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.03.12 06:43:01 +0530

விசாரணை அதிகாரி ஒப்புக் கொண்டுள்ளார் என்றும், உண்மையில் அதிகப்படியான எண்ணிக்கையில் தடை செய்யப்பட்ட மதுபானங்களை கொண்டு வரும்போது சோதனை சாவடிகளை கடந்து எடுத்துக்கொண்டு வர இயலாது என்றும் எதிரி தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் லேபிள்கள் கிழிக்கப்பட்டு மூடி திறந்த நிலையில் வைக்கப்பட்டிருந்த 2 பாட்டில்களை நுகர்ந்து பார்த்தபோது, கொடிய நெடியுடைய வாசனை வந்ததால் அவற்றை பகுப்பாய்விற்கு அனுப்புவதற்காக வெள்ளை நாடாவால் சுற்றி போலீஸ் பட்டன் சீல் வைத்து, பின்னர் பகுப்பாய்விற்கு அனுப்பப்பட்டதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி அ.த.சா.ஆ.11 தடயவியல் பகுப்பாய்வு அறிக்கையின் வாயிலாக மதுபானத்தில் எ

புலன்விசாரணை அதிகாரி அ.சா.6 தனது சாட்சியத்தில் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்ட மதுபானத்தில் விஷத்தன்மை உள்ளதாக ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

13.8) எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களில் மதுபாட்டில்கள் திறந்த நிலையில் இருந்ததாகவும், எதிரியை சம்பவயிடத்தில் கைது செய்யவில்லை என்றும், எதிரி தான் வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டதற்கான சாட்சிகளும் இல்லை என்றும், தனிநபர் சாட்சிகள் யாரும் எதிரி மதுபானங்களில் விற்பனை செய்தார் என்று தெரிவிக்கவில்லை என்றும், வழக்கு சொத்துக்களை எதிரி எங்கு வாங்கினார், யாரிடமிருந்து வாங்கினார், யாருக்கு விற்பனை

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.03.12 06:43:09 +0530

செய்தார், எவ்வளவு லாபத்திற்கு விற்பனை செய்தார் என்ற விபரங்கள் எதுவும் குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றும், எதிரியிடமிருந்து வழக்கு சொத்தை விற்பனை செய்ததில் அவரிடமிருந்து பணம் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றும், அதனால் அரசு தரப்பு வழக்கு பாதிப்படைந்துள்ளது என்றும், எனவே இவ்வழக்கு ஜோடிக்கப்பட்ட வழக்கு என்றும் வாதங்களை முன்வைத்ததார்.

13.9) மேற்படி சங்கதி குறித்து பரிசீலனை செய்ததில், அ.சா.1 தனது குறுக்குவிசாரணையில் "என்ன வழக்கு சொத்துக்கள் எடுக்கப்பட்டது என்றால் 180 மி.லி. அளவுள்ள பாண்டிச்சேரி மது வகைகளான புளூ கிரேப் பிராந்தி 10 பாட்டில், 180 மி.லி. அளவுள்ள Crown of Crowns பிராந்தி 21 பாட்டில்களும், சீல் மற்றும் லேபிள் இல்லாமல் திறக்கப்பட்ட நிலையில் 2 மது பாட்டில்களும் எடுக்கப்பட்டது. மேற்படி சொத்துக்கள் எதில் இருந்தது என்றால் பிளாஸ்டிக் சாக்குப் பையில் இருந்தது. நீதிமன்றத்தில் வழக்கு சொத்து ஒப்படைக்கப்பட்டுள்ளதா என்றால் சரியாக தெரியவில்லை. சம்பவ இடத்திற்கு வடக்கு பக்கம் தார் ரோடு உள்ளது. கிழக்கு பகுதியில் சரியாக ஞாபகமில்லை. பாண்டிச்சேரி மது வகைகள் என்று எப்படி தெரியும் என்றால் சரியாக தெரியவில்லை" என்று தெரிவித்துள்ளார். அ.சா.2 தனது குறுக்குவிசாரணையில் "வழக்கு சொத்துக்கள் ஆனது பிளாஸ்டிக் சாக்கில் இருந்தது" என்று சாட்சியமளித்துள்ளார்.

13.10) வழக்கு சொத்துக்கள் எதிரியின் வீட்டின் அருகே இருந்து கைப்பற்றப்பட்டதாக தான் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதை எதிரி தான் மறைத்து வைத்திருந்தார் என்பதை நிரூபணம் செய்ய அரசு தரப்பில் எந்த ஒரு தனி நபர் சாட்சியையும் விசாரிக்கவில்லை. வழக்கு சொத்திற்கும், எதிரிக்கும் உள்ள தொடர்பு குறித்து தகுந்த சாட்சிய, சான்றாவணங்கள் தாக்கல்

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.03.12 06:43:14 +0530

இல்லை. எனவே இது குறித்து எதிரி தரப்பில் தெரிவிக்கப்பட்ட ஆட்சேபனை ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவே உள்ளது. இவ்வழக்கில் சம்பவயிட சாட்சிகளாக யாரும் விசாரிக்கப்படாத நிலையிலும், மேலும், காவல்துறை அதிகாரிகளை தவிர தனிநபர் சாட்சிகளாக யாரும் சேர்க்கப்படாத நிலையிலும், எதிரியிடமிருந்து தான் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்டது என்பதை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்ய வேண்டிய கடமை அரசு தரப்பிடமே உள்ள நிலையிலும், எதிரியிடமிருந்து வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்ற நிலையிலும், வழக்கில் கண்ட முக்கிய குறைபாடுகள் காரணமாகவும், தொடர்புமை நிரூபணம் செய்யப்படாததால் சந்தேகத்தின் பலன் எதிரிக்கு கிடைக்கக்கூடியது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டான வழக்கு சொத்துக்கள் எதிரி தான் வைத்திருந்தார் என்பதையும், எதிரி தான் மதுபாட்டில்களை விற்பனைக்கு வைத்திருந்தார் என்பதையும் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறியுள்ளது. எனவே, நீதியின் நலன் கருதி எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்வதே உகந்ததாக இருக்குமென்றும் இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

இறுதியாக, எதிரி மீதான பிரிவு **4(1)(C) TNP (Amendment) Act–ன்** கீழான குற்றச்சாட்டு தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று தீர்மானித்து, எதிரி மேற்படி பிரிவின் கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து, எதிரியை பிரிவு **271(1) BNSS** ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. எதிரி இவ்வழக்கில் கொடுத்துள்ள பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்தாக உத்தரவிடப்படுகிறது.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.03.12 06:43:18 +0530

இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மதுபாட்டில்கள் 31யை மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு உரிய முறையில் கொட்டி அழித்து பாட்டில்களை அரசு உடைமையாக்கவும் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணிணி மூலம் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 12ம் நாள் வெள்ளிக்கிழமை திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.03.12 06:43:24 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர் நத்தம்.

**அரசுத் தரப்பு சாட்சிகள் –**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | 16.09.2025 | திரு.கிருபாகரன் (கைப்பற்றுதல் மகஜர் சாட்சி) |
| அ.சா.2 | 16.09.2025 | திரு.ராபர்ட் லாரன்ஸ் (கைப்பற்றுதல் மகஜர் சாட்சி) |
| அ.சா.3 | 16.09.2025 | திரு.அழகுராஜ் (ஒப்புதல்வாக்குமூல சாட்சி) |
| அ.சா.4 | 25.02.2026 | திரு.ஜெரால்டுராஜா (ஒப்புதல்வாக்குமூல சாட்சி) |
| அ.சா.5 | 25.02.2026 | திருமதி.ஜோதிலெட்சுமி |
| அ.சா.6 | 26.02.2026 | திரு.கிருஷ்ணகுமார் (புலன்விசாரணை அதிகாரி) |

**அரசுத் தரப்பு சான்றாவணங்கள்–**

| | | |
|---|---|---|
| அ.த.சா.ஆ.1 / அ.சா.1 | 09.09.2024 | கைப்பற்றுதல்மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் |
| அ.த.சா.ஆ.2 / அ.சா.2 | 09.09.2024 | கைப்பற்றுதல்மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் |
| அ.த.சா.ஆ.3 / அ.சா.3 | 12.09.2024 | ஒப்புதல்வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் |

| | | |
|---|---|---|
| அ.த.சா.ஆ.4 / அ.சா.4 | 12.09.2024 | ஒப்புதல்வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் |
| அ.த.சா.ஆ.5 / அ.சா.6 | 09.09.2024 | தனிஅறிக்கை |
| அ.த.சா.ஆ.6 / அ.சா.6 | 09.09.2024 | அத்தாட்சி |
| அ.த.சா.ஆ.7 / அ.சா.6 | 09.09.2024 | முதல்தகவல்அறிக்கை |
| அ.த.சா.ஆ.8 / அ.சா.6 | 12.09.2024 | ஒப்புதல்வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி |
| அ.த.சா.ஆ.9 / அ.சா.6 | 09.09.2024 | படிவம் – 91 |
| அ.த.சா.ஆ.10 / அ.சா.6 | 11.09.2024 | பிரிவு 65–B IEA சான்றிதழ் |
| அ.த.சா.ஆ.11 / அ.சா.6 | 16.12.2024 | தடயவியல் அறிக்கை |
| அ.த.சா.ஆ.12 / அ.சா.6 | 04.02.2025 | சட்டப்பிரிவு மாறுதல்அறிக்கை |

<u>அரசுத் தரப்பு சான்றுபொருட்கள்</u>

1. அ.சா.பொ.1 – 180 ml அளவு கொண்ட Blue Grape Brandy – 10 பாட்டில்கள்180 ml அளவு கொண்ட Crown of Growns Brandy – 21 பாட்டில்கள் ஆக 31 பாட்டில்கள்

<u>எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் :</u>– இல்லை

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Date: 2026.03.12 06:43:30 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர் நத்தம்.

<u>**குறிப்பு –**</u>

1) இவ்வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.

2) இவ்வழக்கு விசாரணையின் போது எந்த ஒரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் அழைத்து விசாரணை செய்யப்படவில்லை.

3) இவ்வழக்கின் முடிவு குறித்து சிறு குறிப்பு காவல் துறையினருக்கு வழங்கப்பட்டது.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Date: 2026.03.12 06:43:34 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர் நத்தம்.